(ஆ) கோரிக்கை எண். 8—தேர்தல்கள்

திருவாளர்கள் எச். எம். ராஜு. கோ. விரையன், எஸ். டி. உகம்சந்த் ஆகியவர்களுடைய வெட்டுத்தீர்மானங்கள் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெற்றுக் கொள்ளப்பெற்றன.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : பேரவை முன்னுள்ள கேள்வி :

"மானியக் கோரிக்கை எண் 8—தேர்தல்கள் என்ற தலைப்பின் கீழ் ரூ. 1,53,27,000-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப்பெற வேண்டும்".

மானியக் கோரிக்கை பேரவையின் முடிவிற்கு விடப் பெற்று, நிறைவேற்றப்பெற்று, கோரிய தொகை அரசுக்கு வழங்கப்பெற்றது.

3. அறிவிப்புகள்—தொடர்ச்சி.

(இ) நிதி ஒதுக்க (எண் 3) சட்ட முன் வடிவு, 1990 (ஆ, இ).

மாண்புமிகு பேரவைத் தலைவர் : பேரவைக்கு ஓர் அறி விப்பு. 1990 ஆம் ஆண்டு தமிழ்நாடு நிதி ஒதுக்க (எண் 3), சட்ட முன்வடிவைப் பேரவையில் அறிமுகம் செய்யவும், ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளவும் ஆளுநர் அவர்கள் தமது இசை வினைத் தெரிவித்து உள்ளார்கள்.

6. சட்டமுன்வடிவுகள் (அறிமுகம் செய்தல்) தொடர்ச்சி.

(ஆ) நிதி ஒதுக்க (எண் 3) சட்ட முன்வடிவு, 1990.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : மாண்புமிகு பேர வைத் தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன் :

"1990 ஆம் ஆண்டு தமிழ்நாடு நிதி ஒதுக்க (எண். 3) சட்ட முன்வடிவைப் பேரவைமுன் அறிமுகம் செய்ய அனுமதி அளிக்க வேண்டும்".

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று நிறை வேற்றப்பெற்று அனுமதி வழங்கப்பெற்றது.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : இச்சட்ட முன்வடிவைப் பேரவைமுன் அறிமுகம் செய்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இச்சட்ட முன்வடிவு அறிமுகம் செய்யப்பெற்றிருக்கிறது.

பேரவையின் இன்றைய அலுவல்கள் இத்துடன் முடிவுற்று, 7—5—1990 காலை 9.00 மணிக்குப் பேரவை மீண்டும் கூடும். வணக்கம்.

பின்னர் பேரவை பிற்பகல் 13.02 மணிக்கு ஒத்திவைக்கப் பெற்றது.

8. பேரவை முன் வைக்கப்பெற்ற ஏடுகள்.

அ. சட்டப்படிக்கான விதிகளும், ஆணைகளும்.

89. சென்னை, சேத்துப்பட்டு, தோராசிக் மருந்துகள் கழகத்தினருக்காக, திருவாளர்கள் வி. எஸ். டி. மோட்டார்கள் (தனியார்) நிறுவனத்தாரால் எக்ஸ்ரே கருவியுடன் வடிவமைக்கப்பட்ட மோட்டார் வாகனத்திற்கு விற்பனை வரியிலிருந்து விலக்களிப்பது குறித்து வணிகவரிகள்—சமய அறக்கட்டளைகள் துறையின் 2—11—1989 ஆம் நாளிட்ட 842 ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை. (1959 ஆம் ஆண்டு தமிழ்நாடு பொது விற்பனை வரிச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 1/1959) 53 (5) பிரிவின் கீழ் பேரவை முன் வைக்கப் பெற்றது.]

90. 1959 ஆம் ஆண்டு தமிழ்நாடு பொது விற்பனை வரிச் சட்டத்தில் திருத்தமொன்று செய்வது குறித்து வணிக வரிகள்—சமய அறக்கட்டளைகள் துறையின் 30—11—1989 ஆம் நாளிட்ட 852 ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை. (1959 ஆம் ஆண்டு தமிழ்நாடு பொது விற்பனை வரிச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 1/1959) 53(5) பிரிவின் கீழ் பேரவை முன் வைக்கப் பெற்றது.]

91. சென்னை, தாம்பரம், இந்து மிஷன் மருத்துவ நிலையத்தினருக்கு விற்பனை செய்யப்படும் மருந்துப் பொருட்கள் மற்றும் உபகரணங்களுக்கு விற்பனை வரியிலிருந்து விலக்களிப்பது குறித்து வணிகவரிகள்—சமய அறக்கட்டளைகள் துறையின் 7—12—1989-ஆம் நாளிட்ட 865 ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை. 1959 ஆம் ஆண்டு தமிழ்நாடு பொது விற்பனை வரிச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 1/1959] 53(5) பிரிவின் கீழ் பேரவை முன் வைக்கப் பெற்றது.]

92. தமிழ்நாடு மேக்னசைட் லிமிடெட்டின் 1988-89 ஆம் ஆண்டிற்கான ஆண்டறிக்கை. (1956 ஆம் ஆண்டு நிறுவனங்கள்